ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,569 - 1965 නොවැම්බර් 26 වැනි සිකුරාදා — 1965.11 26

14,569 ம இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 381 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 382 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 384 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 385 |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **கேள்விக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் எனினும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாளவீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம் பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்காலம்/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த

படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர் கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியிலன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்று என்பதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலை யிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவிக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங் கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## ஆற்றுப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை

### காலிஸ்தானங்கள்

பயிற்சி பெறும் கணக்கு எழுதுவினைஞர்கள் பதவிக்கு இலங்கையரிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர்கள் 1.1.66 ல் 20 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்டவர்களாயும் இரு மொழிகளில் ஒன்றில் பின்வரும் பாடங்களோடு ஒரே முறையில் பொதுக் கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சை (சாதாரணம்) அல்லது சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களாயும் இருத்தல் வேண்டும் :—

கணிதம் அல்லது எண்கணிதம்,
கணக்குப் பதிவியல்
ஆங்கிலம்.

கணக்கு வேலைகளில் அனுபவம் பெற்றிருத்தல் பயனுள்ளதாகும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரருக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 1,200—72—1,920 என்ற சம்பளத்திட்டப்படி சம்பளம் வழங்கப்படும். மேற்படி சம்பளத்தோடு அரசாங்க விகிதத்தில் தற்காலிக வாழ்க் கைப்படிகளும் கொடுக்கப்படும். குடிமனைகள் கொடுக்கப்படாவிட்டால் மணமானவர்களுக்கு சம்பளத்தில் 15 சத வீதமும் மணமாகாதவர் களுக்கு $7\frac{1}{2}$ சதவீதமும் வீட்டு வாடகையாக வழங்கப்படும். சகாய நிதி உதவிகளும் உண்டு.

விண்ணப்பகாரர்கள், இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவர்க்கு, தம் சொந்த முகவரியும் தபால் தலைகளும் கொண்ட கடித உறைகளோடு எழுதி அல்லது நேரில் வந்து விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் பதவியின் பெயர் கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்கள் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கேற்ப சிங்களத்தில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி 15.12.65 ஆகும்.

நிர்வாகச் செயலாளர்,
ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை.

த.பெ. 524,
415, புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 7.

11-1098—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

மன்னார் உப பிரிவின் கீழ் உள்ள கட்டுக்கரைக்குள அணைக்கட்டின் மணவேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செய லகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசன பகுதியிலே 100,000 க்கும் அதற்கு மேல் பதிவு செய் துள்ள மணவேலைக்கான போதிய இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்பந் தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதி யுடையவராவர். வவுனியாவிலுள்ள பெரும்பிரிவு நீர்பாசன பொறியிய லாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதி கொண்ட விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்த்த வேறைய கச்சேரி ஒன்றில் ரூபா 200 கேள்விப் பத்திர கட்டுப்பண மாக கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு வவுனியாவிலுள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜே. குமநாயக்கா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நொவம்பர் மீ 20 ந் உ.

11-1010—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## பரீட்சைப் பகுதி

### குறைவெட்டுக் கடதாசி

2 தொன் குறைவெட்டுக் கடதாசி விற்பனைக்காக கொழும்பு 2, மலே வீதியில் உள்ள பரீட்சைப் பகுதியில் இருக்கிறது. இதை வாங்க விரும்பு பவர்கள் கிழமை நாட்களில் முற்பகல் 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரையும், சனிக்கிழமைகளில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரையிலும் பரீட்சைப் பகுதிக்கு நேரில் வந்து பார்வையிடலாம்.

விலைவாசி குறிப்பிட்ட விண்ணப்பங்கள் இடதுபக்க மேல்மூலையில் "off-cuts" என எழுதப்பட்ட மெழுகு இடப்பட்டதும், பதிவு செய்யப்பட்ட துமான தபால் மூலம் 1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறைவெட்டுக் கடதாசிக் குரிய விலையின் முழுத்தொகையையும் கட்டி 24 மணி நேரத்திற்குள் அவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

எச். எல். விமலசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1965 ம் ஆண்டு நொவம்பர் மீ 17 ந் உ.

11-983—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

## கல்வித் திணைக்களம்

### நுணுக்குக்காட்டிகள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப்பத்திரங்கள் 1965/66

நுணுக்குக்காட்டிகள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப்பத்திரங்கள் வெள்ளிக்கிழமை, 1966 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 25 ந் திகதி மு. ப. 10.30 மணிவரை கொழும்பு 3, சேர் ஏணெஸ்ற் டி சில்வா மாவத்தையிலுள்ள கல்வி, கலாச்சார அமைச்சின் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் "கல்விப்பணிப்பாளர், விநியோகக் கிளை, கல்வித் திணைக்களம், மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்திற்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வித் திணைக்களத்தின் "எச். எ." கிளையிலும் கொழும்புக்கு வெளியே உள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1966 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 24 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ரி. டீ. விஜெயரட்ண,
கல்விப்பணிப்பாளருக்காக.

கல்வித் திணைக்களம்,
மலாய் வீதி, கொழும்பு 2,
1965 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 26 ந் திகதி.

11-965—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கல்முனை உபபிரிவு

மட்டக்களப்பு புகையிரத நிலயத்திலிருந்து கல்முனையிலுள்ள உபபிரிவு பண்டசாலைக்கு சாமான்களை கொண்டு சென்று ஒப்படைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம், ஆண்டு மார்கழி மாதம் 14 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 10.30 மணியளவில் திறக்கப்படும்.

2. இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு மாவட்ட பொறியியலாளர் கந்தோரிலும் கல்முனை, அம்பாரை, செங்கலடியிலுள்ள பொறியியலாளர் கந்தோரிலும், அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் இந்த இலாகாவில் ரூபாய் 10,000/- அல்லது அதற்கு மேட்பட பதிவுசெய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களால் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறமுன் வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன், தாம் தற்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயனபடும. கேள்விப்பத்திரங்கள் வழங்குமுன், கல்முனை, அம்பாரை, செங்கலடி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் ரூபா 25/- கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திய பற்றுச்சீட்டு காட்டினலும் போதுமானது.

4. இதைப்பற்றிய மேலதிக விபரங்களை கல்முனை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில, கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சபாரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கல்முனை உபபிரிவு.

நீர்ப்பாசன காரியாலயம்,
கல்முனை,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 18 ந உ.

11—1031—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகா கனத்தராவ உபபிரிவு

மகா கனத்தராவ உபபிரிவில் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வடமத்திய பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும், அதன்பின் உடனே திறக்கப்படும்.

(1) மகா கன்னத்தராவ வலப்பக்க பிரதான வாய்க்கால் 6 கட்டை 20 சங். தொடக்கம் 7 ம் கட்டை வரை அமைத்தல்.

(2) மகாகனத்தராவ வலப்பக்க பிரதான வாய்க்கால் 7 ம் கட்டை தொடக்கம் 7 ம் கட்டை 27 ம் சங்கிலி வரை அமைத்தல்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் முறையே 48,000/- ரூபாவிற்கும் 22,000/- ரூபாவிற்கும் அதற்கு மேலும பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள, கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்கான கேள்விப்பத்திரங்களை மகா கனத்தராவ, அனுராதபுரம, பதவியா ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் 17.12.65 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிவரை கேள்விக்கட்டணமாக ரூபா. 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இக்கேள்விக்கட்டணத்தை ஒரு கச்சேரியில செலுத்திய பற்றுச்சீட்டுக் காட்டினலும் போதுமானது. கேள்வியாளராக முனவருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் மகா கனத்தராவ உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகா கனத்தராவ உபபிரிவு.

மிகிந்தலை,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 12 ந உ.

11—780—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## வீரக்குளிச்சோலை இலங்கை நடுத்தர வகுப்பினருக்கான காணித்திட்டத்திற்கு உள்பாதை போடுதற்கான கேள்விப் பத்திரங்கள்

வீரக்குளிச்சோலை இலங்கை நடுத்தர வகுப்பினர் காணித்திட்டத்தின் (விஸ்தரிப்புப் பகுதி) உள் ரோட்டு போடுதற்கான கேள்விபபத்திரங்கள் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ந் திகதி பகல் 12 மணிவரை. நில, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விச்சபையால் (தபால் விலாசம் : செயல் அலுவலகம், கொழும்பு. 1) ஏற்றுக்கொள்ளப்படும். மேற் குறிப்பிட்ட நேரம் கேள்விகள் திறக்கப்படும் சமயம் கேள்விக்காரர் சமூகம் அளித்தற்கு அனுமதிக்கப்படுவர்.

2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியின் முதல்நாள் பகல் 12 மணிவரை புத்தளம் கச்சேரியில் (காணிக்கிளை) ரூபா 50 வைப்புப் பணமாகக் கட்டிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளமுடியும். கேள்விகள் இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3. ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 6 மாத காலத்திற்குள் வேலை முடிக்கப்பட்டு அரசாங்க அதிபருக்கோ அல்லது அவரால அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிக்கோ பாரங்கொடுபடல் வேண்டும். காட்டப்படும் காரணங்களின் தகமை கண்டு காலம் விஸ்தரிப்பது பற்றி பரிசீலனை செய்யப்படலாம்.

4. இது பற்றிய ஏனைய விபரங்கள் புத்தளம் அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்க அதிபர், புத்தளம்.

11-1073—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

## வன இலாகா

**மேல் மாகாண வனப்பிரிவிலுள்ள வகவட்ட வனப்பிரிவில் இந்திக்கட என்னுமிடத்திலிருக்கும் 9,000 இருத்தல் வரையுள்ள கடுக்காய் பழங்கள் விற்பனைக்காகிய விண்ணப்பங்கள்**

வனபரிபாலகர், 1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ந் திகதி பி. ப. 2.30 மணி வரைக்கும் மேற்கூறப்பட்ட பழங்கள் விற்பதற்கான, மெழுகிடப்பட்ட தபாலுறையில் அடைக்கப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வார். கந்தோர் நேரங்களில் வக வட்ட வனப்பிரிவு வன அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இந்திக்கடவிலுள்ள பழங்களைப் பார்வையிடலாம். ஒரு இருத்தல் பழம் என்ன விலைக்கு வாங்குவார் என்பதை விண்ணப்பத்தில் குறிக்க வேண்டும்.

2. தபால் மேலுறையின் இடது மூலையில் " கடுக்காய் பழங்கள் விற்பனைக்கான விண்ணப்பங்கள் " எனக் குறித்து வன பரிபாலகர், த. பெ. எண் 509, கொழும்பு என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் அவரின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் பழத்தொகை முழுவதையும், அதற்குரிய ரொக்கப் பணத்தைச் செலுத்தி அகற்றும்படி வேண்டப்படுவார்.

டபிள்யூ. ஜீ. வீரரத்தின,
பதில் வனபரிபாலகருக்காக.

வனபரிபாலகர் காரியாலயம்,
த.பெ. எண் 509,
கொழும்பு 2,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 18 ந் உ.

11—1082—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## சந்தைப்படுத்தல் பகுதி

1966.1.1 ம் திகதி முதல் 1966.12.31 ம் திகதிவரை சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டியில் இருக்கும் பழப்பானம் தயாரிக்கும் கம்மாலை உள்ள காணியில் இருக்கும் புல்லு வெட்டி அப்புறப்படுத்துவதற்குரிய ரெண்டர் முடிவு 1965.12.17 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு. கேள்விப்பத்திரங்கள் 1965 திசெம்பர் 17 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டி பழப்பானம் தயாரிக்கும் கம்மாலை இருக்கும் கந்தோரில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

11—1122—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## சந்தைப்படுத்தல் பகுதி

சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டியில் உள்ளவரின் உணவுக்கூடத் தாபனத்திற்கு 1966.1.1 ம் திகதி முதல் 1966.12.31 ம் திகதிவரை விறுக்கிரி வழங்குவதற்குரிய ரெண்டர் முடிவு 1965.12.17 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணியாகும்.

கேள்விப்பத்திரங்கள் 1965.12.17 ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டியிலுள்ள பழப்பானம் தயாரிக்கும் கம்மாலை இருக்கும் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

11—1130—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## சந்தைப்படுத்தல் பகுதி

1966.1.1 ம் திகதி முதல் 1966.12.31 ம் திகதிவரை சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டியில் இருக்கும் பழப்பானம் தயாரிக்கும் கம்மாலையில் உள்ள தூள் திரிக்கும் யந்திரங்களின் அலகுகளை கூர்மைப்படுத்தல். ரெண்டர் முடிவு 1965 திசெம்பர் 17 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு.

கேள்விப்பத்திரங்கள் 1965.12.17 ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் சந்தைப்படுத்தல் பகுதியின் நாரம்பிட்டி பழப்பானம் தயாரிக்கும் கம்மாலை உள்ள கந்தோரில் ரூபா 50/- கட்டுப்பணம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

11—1124—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை போக்குவரத்துச் சபை

**மிகுதியான மோட்டார் பிறேக்லைனிங்குகளின் விற்பனவு**

பின்வரும் இனங்களைச் சேர்ந்த வாகனங்களுக்குரிய மோட்டார் பிறேக் லைனிங்குகள், இரத்மலானை, காலிவீதி, 126ம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. விற்பனவு நிலையத்தில் விற்பனவுக்குண்டு.

ஏ. ஈ. சி.
இன்டர் நாஷனல்
வோர்ட்
செவர்லட் லோட் மாஸ்டர்
கொமர்
ஹை
டொட்ஜ்
அஸ்டின்—மொரிஸ கமர்ஷல்

விலைநிரல்களும் மற்றைய விபரங்களும் விற்றுத்தீர்க்கும் நிலையத்திலுள்ள பொறுப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். பிறேக் லைனிங்குகளை மேற்குறித்த வேளைகளில் பார்வையிடலாம்.

எஸ். எம். எச். பாஸ்லி,
பிரதம விநியோக உத்தியோகத்தர், இலங்கைப் போக்குவரத்துச் சபை.

விநியோகப் பகுதி,
வெரஹெர, பொரலஸ்கமுவ,
1965 ந் ஆண்டு நவம்பர் மீ 15 ந் உ.

11-1001—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

## பொலிஸ் இலாகா

### பாவனைக்கு உதவாத அங்கிகள், துவிச்சக்கரவண்டிகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்கு

இத்தால் அறியத்தருவதாவது யாதெனில் பல பாவனைக்கு உதவாத அங்கிகளும் மற்றும் பல பொருட்களும் துவிச்சக்கர வண்டி உட்பட 4.12.65 ந் திகதி முற்பகல் 9.30 மணியளவில் எனது ஸ்தாபனத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

ஏலத்திற்குரிய பொருட்களைப் பார்வையிட விரும்பியோர் கந்தோர் நேரத்தில் வேலை நாட்களில் எனது ஸ்ரோறில் பார்வையிடலாம்.

இச்சாமான்கட்குரிய பெறுமதியை உடனே செலுத்தியபின்தான் சாமான் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படும்.

சி. எச். விஜயசிங்க,
பொலிஸ் அதிகாரிக்காக,
குருநாகல், வ. மே. மாகாணம்.

பொலிஸ் காரியாலயம், குருநாகல்,
1965 ம் ஆடு நொவம்பர் மீ 15 ந் உ.

11-994—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

சுதந்திர தினத்தை முன்னிட்டு, 1966 ந் ஆடு பெப்ரவரி மாதம் 4 ந் தேதி இரவு குருநாகல் (வாவிக் கருகில்) வாண வேடிக்கைக் கண்காட்சிப் போட்டியொன்று நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1 வது, 2 வது, 3 வது ஸ்தானங்களுக்கு வரும் போட்டியாளர்களுக்கு கௌரவ உள்நாட்டமைச்சரவர்களால் முறையே ரூ. 1000, ரூ. 500, ரூ. 250 கொண்ட மூன்று பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் உத்தரவுபெற்ற வாணத் தயாரிப்பாளர்கள், உரிய பத்திரங்களையும், விவரங்களையும், 15.12.1965 ந் திகதிக்கு முன் உள்நாட்டமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 1965 ந் ஆடு நவம்பர் மீ 15 ந் உ.

11-924—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

## கிறிஸ்மஸ் மர விற்பனை—1965

1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ந் திகதி வரைக்கும் நுவரேலியாவிலுள்ள வன பகுதி உத்தியோகத்தரால் கிறிஸ்மஸ் (சைபிரஸ்) மரங்களுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பட்டிப்பொலையிலுள்ள வன உத்தியோகத்தருடைய வீட்டிலிருந்து கிறிஸ்மஸ் மரங்கள் பெறுவதாக இருந்தால் விலை பின்வருமாறு :—

| | | ரூ. ச. | |
|---|---|---|---|
| 3 அடி வரைக்கும் | .. .. | 4 00 | ஒரு மரம் |
| 7 அடி வரைக்கும் | .. .. | 7 00 | ஒரு மரம் |
| 10 அடி வரைக்கும் | .. .. | 12 00 | ஒரு மரம் |
| 12 அடி வரைக்கும் | .. .. | 14 00 | ஒரு மரம் |

3. நேரே போய் மரங்கள் எடுக்க முடியாவிட்டால் ஏதாவது ஒரு புகையிரத நிலையத்துக்கு மரங்கள் அனுப்பி வைக்கப்படும். புகையிரதக் கட்டணம் உட்பட மரத்தின் விலை பின்வருமாறு :—

| | | ரூ. ச. | |
|---|---|---|---|
| 3 அடி வரைக்கும் | .. .. | 4.50 | ஒரு மரம் |
| 7 அடி வரைக்கும் | .. .. | 8 50 | ஒரு மரம் |
| 10 அடி வரைக்கும் | .. .. | 15 00 | ஒரு மரம் |
| 12 அடி வரைக்கும் | .. .. | 18 00 | ஒரு மரம் |

4. புகையிரதத்தில் மரம் அனுப்புவது விண்ணப்பதாரரின் சொந்தப பொறுப்பிலேயாகும். இப்படி அனுப்பப்படும் மரங்களைப் பற்றிய முறைப்பாடுகள் இக்காரியாலயத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பங்களுடன் நுவரேலியா அரசாங்க அதிபரின் பெயரில் எடுக்கப்பட்ட போஸ்டல் ஓடர் அல்லது மணி ஓடர் இணைக்கப்பட வேண்டும், அத்துடன் பின்வரும் விபரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

(அ) தேவையான மரங்களின் உயரமும் எண்ணிக்கையும்.
(ஆ) அனுப்பப்பட வேண்டிய திகதி.
(இ) அனுப்பப்பட வேண்டிய புகையிரத நிலையம்.

6. காசு முற்பணமாகக் கட்டப்படாவிடில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தேவையான விபரங்கள் கொடுக்கப்படாதிருந்து மரங்கள் தருணத்திற்குக் கிடைக்காது விட்டால் இக்காரியாலயம் பொறுப்பேற்கமாட்டாது.

8. 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ந் திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எவ். எல். எம். பெரேரா,
மாவட்ட வன உத்தியோகத்தர்.
மலை நாடு.

மாவட்ட வன உத்தியோகத்தர் காரியாலயம்,
நுவரேலியா,
1965 ம் ஆடு நவம்பர் மீ 4 ந் உ.

11-432—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.